19

பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள்

சென்னை – 600 002.

ந.க.எண்: 5669/எ1/2020, நாள்: 21 .12.2020.

பொருள்: புரிந்துணர்வு ஒப்பந்தம் – பொது நூலக இயக்ககம், சென்னை – 2 – தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் – மாவட்ட மைய நூலகத்தில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் இளநிலை மற்றும் முதுநிலை பாடநூல்கள் நூலடுக்குகளில் வைத்து பயன்படுத்துவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் – தொடர்பாக.

பார்வை: பொது நூலக இயக்ககம் மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து மாவட்ட மைய நூலகங்களில் தமிழ்நாடு திறந்தளெி பல்கலைக்கழக நூல்களை அப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பயன்படுத்துவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding )

* * * * *

பார்வையில் காணும் பொது நூலக இயக்ககம் மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து மாவட்ட மைய நூலகங்களில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக நூல்களை அப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பயன்படுத்துவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்த (Memorandum of Understanding) நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்பபடுகிறது.

2. மேற்காணும் ஒப்பந்தத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு செயல்பட சம்பந்தப்பட்ட அலுவலர்களால் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுதிடப்பட்டுள்ளது.

- அதன்படி அனைத்து மாவட்ட மைய நூலகங்களுக்கும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் அப்பல்கலைக்கழகத்தின் இளநிலை மற்றும் முதுகலை பாடநூல்கள் (சுயமாக கற்கும் உபகரணம் (Self Learning Materials) மற்றும் இலவச நூலடுக்குகள் அனுப்பிவைக்கப்படும்.

- மேற்காணும் விவரப்படி பெறப்படும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக சுயமாக கற்கும் உபகரணங்களை அப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்படவேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட மைய நூலக சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் குறைகள் / பரிந்துரைகள் தெரிவிப்பதற்காக தனியாக ஒரு பதிவேடு பராமரிக்கப்படவேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் நூலக வேலை நாள் மற்றும் நூலக பணிநேரத்தில் நூலகத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- சம்பந்தப்பட்ட மாவட்ட மைய நூலகத்தில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தின் மூலம் இலவசமாக பெறப்படும் கற்கும் உபகரணங்கள் மற்றும் நூலகடுக்குளுக்கான தனியாக இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவேண்டும்.
- மேலும், தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் பயன்படுத்தும் அப்பல்கலைக்கழகத்தின் கற்கும் உபகரணங்களை பதியும் பொருட்டு தனியாக ஒரு பதிவேடு பராமரிக்கப்படவேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்திலிருந்து இலவசமாக பெறப்படும் நூலடுக்குகளில் கற்கும் உபகரணங்களை வைத்து எல்லோரும் பார்க்கும்வகையில் பெயர் பலகை வைக்கப்படவேண்டும்.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்கள் e-library சேவையினை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- மேற்காணும் திட்டத்திற்காக மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து செலவிட அனுமதியில்லை.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்திலிருந்து பாடநூல்கள் / நூலடுக்குகள் பெறப்பட்ட விவரம் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை விவரத்தை தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொது நூலக இயக்குநரி (கூ/பொ)

பெறுநர்

அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட மைய நூலகர்கள்.

நகல்

பதிவாளர் அவர்கள்,
தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம்,
சைதாப்பேட்டை, சென்னை – 600 015.